Vol. 1 No. 2 பூ 1 மலர் 2 யூலை 14 1998 - ஆகஸ்ட் 14 1998

இரவி IRAVI

இரவி
மாதமொருமுறை
ஆசிரியர்:
வ.ந. கிரிதரன்

IRAVI
Monthly
Chief Editor:
V.N.Giritharan

Published by WEBCOM COMMUNICATIONS 476 Parliament Street, Suite 201, Toronto, Ontario M4X 1P2 Tel:(416) 924 6456

இலவசம்/ FREE ISSN 1481-1189

மட்டக்களப்பில் மீனவர் படுகொலை

சிறிலங்கா இராணுவம் நான்கு மீனவர்களின் சடலங்களை வாழைச்சேனை வைத்தியசாலையில் கையளித்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இவர்கள் உடல்களில் காணப்பட்டண. இவர்களது பிரேதங்களை இராணுவம் கிண்ணியடி நீரேரியிலிருந்து கைப்பற்றியதாக அறியப் படுகின்றது. தம்பிப்பிள்ளை காளிராஜ் வயது 22, வைரமுத்து தங்கவடிவேல் வயது 27, பிள்ளையன் செல்லத்துரை வயது 20, கணபதிப்பிள்ளை தவசீலன் வயது 22 ஆகிய மீனவர்களே இவர்ளென அடையாளம் காணப் பட்டுள்ளனர். மரண விசாரனை நடாத்திய வைத்திய அதிகாரியின் அறிக்கையின்படி துப்பாக்கிச் சூட்டுக் காயங்களினாலேயே இவர்கள் இறந்துள்ளதாக அறியப் படுகின்றது. இதே சமயம் உள்ளூர் வாசிகள் கிண்ணியடி இராணுவ முகாமிலிருந்து ஞாயிற்றுக் கிழமை இரவு பதினொரு மணியிலிருந்து தொடர்ச்சியாக இரண்டு மணி நேரம் வரை துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகத் தெரிவித்துள்ளனர். இதே சமயம் கருவாக்கேணி பெற்றோல் நிலையச் சந்திக்கருகில் சிறிலங்காப் பொலிசாரிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையில் நடந்த மோதலில் இரு புலி உறுப்பினர்களும் பொதுமக்களிருவரும் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ் இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

EPD தலைவர் டக்ளஸ் தேவானந்தா வெளிநாடு சென்றார்.

அண்மையில் களுத்துறைச் சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டுப் படுகாயத்திற்குள்ளாகிய ஈபிடிபி தலைவர் பெயர் குறிப்பிடப் படாத நாடொன்றிற்கு மேலதிக வைத்திய பரிசோதனைகளிற்காகச் சென்றிருப்பதாக அறியப் படுகின்றது. பாதுகாப்புக் காரணங்களிற்காக நாட்டின் பெயர் அறிவிக்கப் படவில்லை. இவருடன் இரு வைத்தியர்களும், ஈபிடிபி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சென்றிருக்கின்றார்கள்.

Canada Day



-Ottawa, Ontario-

From Prime minister Jean Chretien's Press release

Happy Canada Day everyone!

On this day every year, we do what some people think is downright un-Canadian. We celebrate with one voice - strong and free - the greatest success story in the world: Canada.

For 131 years - without much fanfare or bragging - Canadians have met every challenge thrown our way. We challenged ourselves not only to make Canada a fact of geography. But also to build a sense of community and belonging. To build a National Dream.

And we succeeded!

We challenged ourselves to make Canada a modern, prosperous nation. Building more opportunity and a better quality of life for our people.

And we succeeded!......

But deep inside - and all year round - we will carry with us the warm feeling that comes from knowing that we have built the best country in the world!

Happy Birthday, Canada!

இன்டர்நெட்டில் "கனடாத் தமிழர் பக்கம்" **(Canadian Tamils Page).** இது ஒரு **Webcom communications** தயாரிப்பு. வேலை வாய்ப்பு, செய்தி, சினிமா, விளையாட்டு...... இன்னும் பல விடயங்கள். முகவரி **http://www.pathcom.com/~gthami**

கருப்பு யூலை 1983 நினைவு கூர்வோம



1983. ஈழத் தமிழ் மக்கள் வாழ்வினில் பெரியதொரு திருப்புமுனையினை ஏற்படுத்திய ஆண்டு. பல ஆயிரக்கணக்கில் தமிழ் மக்களைப் பலியெடுத்த ஆண்டு. குழந்தைகள், பெண்கள், போராளிகள், முதியவர்கள் என்று பாகுபாடேயில்லாமல் தமிழ் மக்கள் அடைந்த துயரங்கள்...சோகங்கள்.. அதுவரையில் உள்ளே புகைந்து கொண்டிருந்த தமிழ் மக்களின் பிரச்சினை சர்வதேசரீதியிலான பிரச்சினையாக உருமாறியது. நாகரீக உலகமே நாணும் வகையில் வெலிக்கடைச் சிறையில் போராளிகள் படுகொலை செய்யப் பட்டனர். தொடர்ந்து தமிழ் மக்கள் உலகின் நானாபக்கங்களையும் நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினார்கள். அன்று சிதைந்திட்ட நம் வாழ்வு இன்று வரையில் எந்த வித மாற்றமுமின்றி நம்பிக்கைக் கனவொன்றினையே துணையாக வைத்துத் தொடர்கின்றது. இடையில் தான் எத்தகைய ஒப்பந்தங்கள்... எத்தனையெத்தனை அனர்த்தங்கள்...ஒப்பந்தங்களால் ஏற்பட்ட பலன்கள் தானென்ன? புலம் வாய்ந்த பாரத நாடு தனது இராணுவபலத்துடன் ஏற்படுத்திய ஒப்பந்தமே இன்று குப்பைக் கூடையில். இந்நிலையில் ஒப்பந்தங்களெல்லாம் வெறும் கேலிக் கூத்துக்களே.

அன்று தொட்டு இன்று வரை....தமிழரைப் பீடித்திருக்கின்ற மிகப்பெரிய சாபக்கேடு இந்த ஒற்றுமையீனம் தான். ஒரு காலத்தில் மகோன்னதமான நாகரீகத்துடன் வாழ்ந்த தமிழர்கள், உலகெங்கனுமாக எட்டுக் கோடிவரை வாழ்கிறார்கள். இருந்தும் சொந்தமாக ஒரு நாடில்லாதது துரதிருஷ்டமானது. தமிழர்க்கென்று ஒரு தாயகம் சொந்த பூமி தேவை. இத்தகைய தேவை என்பது காலத்தின், வரலாற்றின் கட்டாயத் தேவை. தமிழர்களாகிய நாம் எம் திறமைகளை வெளிப்படுத்த, பூரண சுதந்திரமான வாழ்வை வாழ்ந்திட எமக்கொரு தாயகம் வேண்டும். தொலை நோக்குடன் நாம் சிந்திக்க வேண்டும். தற்காலிகமாக பிரிவுகளால், நாம் இலக்கை மறந்து விடக் கூடாது. தமிழீழம் என்ற ஒரே இலக்கிற்காக மீண்டும் அனைத்துத் தமிழர்களும் ஒன்று பட்டுப் போராட்டத்தின் நியாயத்தை நியாயப்படுத்துவதன் மூலம் மீண்டும் புத்துணர்வினை ஏற்றிட வேண்டும். எவ்விதம் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு சமயம் உருவானது வரலாற்றுத் தேவையாக இருந்ததோ அது போன்று மீண்டுமொரு கூட்டணி உருவாவதும் வரலாற்றுத்தேவையே.

எவ்விதம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தமிழரசுக் கட்சியின் முக்கியத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டதோ அது போலவே புதிய கூட்டணியிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியத்துவமும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். இதற்கான முயற்சிகள் தொடர வேண்டும். இதற்காக இந்த கறுப்பு யூலையில் மீண்டுமொரு முறை நாம் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். 80 களில் 83 களில் எவ்விதம் தமிழ் மக்கள் அனைவருமே, இயக்க வேறுபாடுகளற்று போராட்ட உணர்வில் நம்பிக்கை கொண்டிருந்தார்களோ அத்தகையதொரு நிலை மீண்டும் வர வேண்டும். அதற்கு இத்தகையதொரு கூட்டணியின் தேவை அவசியமே. அனைத்துத் தமிழர்களும் பொதுவானதொரு இலக்கை நோக்கி ஒன்று படுவதன் மூலமும், சர்வதேச ரீதியிலான பிரச்சாரத்தை முடுக்கி விடுவதன் மூலமும், பாரத அரசை ராஜதந்திர ரீதியில் பாவிப்பதன் மூலமும், சிங்கள முற்போக்கு சக்திகளை அரவணைப்பதன் மூலமும் சிங்களப் பேரினவாத அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து எம்மை விடுவிப்பதற்கான போராட்டத்தை தீவிரப்படுத்த முடியும். எரித்திரியாவிருந்து பாடம் கற்போம். அதேசமயம் தென்னாபிரிக்காவிலிருந்தும் பாடம் கற்போம். போராளிகளின் மக்களின் ஒற்றுமையான பங்களிப்பால் விடுதலை பெற்ற நாடு எரித்திரியா. சுர்வதேச அழுத்தங்களைப் பாவிப்பதில் பெற்ற வெற்றி காரணமாக விடுதலை பெற்ற நாடு தென்னாபிரிக்கா. இதனை நாம் உணர வேண்டும். செயற்பட வேண்டும். இறுதி வெற்றி நமதே. நாளை நமதே.

ஆபத்திற்கு உதவுவான் நண்பன்.....

அண்மைய இந்திய பாகிஸ்தானின் அணுகுண்டுச் சோதனைகள் குறிப்பாக தென்னாசியாவில் உருவாகிவரும் இந்திய மேலாதிக்கம் அமெரிக்காவிற்கு பெரும் எரிச்சலைக் கொடுத்திருப்பது யாவரும் அறிந்ததே. அமெரிக்காவின் இரட்டை வேடம் பெரும்பாலான மேற்கு நாடுகளின் மத்தியிலேயே எடுபடவில்லை. அவசர அவசரமாக முண்டியடித்துக் கொண்டு அமெரிக்காவுடன் சேர்ந்து தடைகளை அறிவித்த கனடா நிலைமையை விளங்கிக் கொண்டு ஸ்சுருதியை அடக்கி வாசிக்கிறது. இதற்கிடையில் அண்மையில் சீனாவிற்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் சீனாவுடன் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவின் அணுகுண்டுச் சோதனைகளைக் கண்டுபிடித்திருப்பது கேலிக்குரியது. சீனா இந்தியாவுடன் புரிந்த யுத்தத்தின் வடுக்கள் இன்னும் ஆறாத நிலை. இந்நிலையில் எவ்விதம் சீனாவுடன் சேர்ந்து வெளியிடும் கண்டிப்பான அறிக்கையை இந்தியா ஏற்குமென அமெரிக்கா எதிர்பார்க்கலாம். இதற்கிடையில் ஆபத்திற்கு உதவுவார் நண்பர் என்பதை நிரூபிக்கும் வகையில் ரஷ்யா இந்தியாவுடனான நட்பைப் புதுப்பிக்கும் வகையில் நடந்திருக்கிறது. அமெரிக்காவின் எதிர்பார்ப்பையும் பொருட்படுத்தாமல் தமிழகத்திலுள்ள கூடங்குளத்தில் அணுமின்னிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் ரஷ்யா கையெழுத்திட்டுள்ளது. அதுமட்டுமல்ல பாகிஸ்தானின் கோரி ஏவுகணைகளை வீழ்த்தும் வல்லமை மிக்க சக்தி வாய்ந்த ஏவுகணை எதிர்ப்பு ராக்கெட்டுக்களையும் இந்தியாவிற்கு அளிக்க ரஷ்யா முன்வந்துள்ளது. ஏஸ் 3000, ஆண்ட்டீ 2500 ஏவுகணை எதிர்ப்பு ராக்கெட்டுக்களே அவை. ஆகாயத்தில் பறக்கும் போர் விமானங்களை 98வீதத் துல்லியமாகவும் 4500 மீற்றர் செக்கனிற்கு என்ற வேகத்திலும் தாக்கும் இவை 2500 கிலோமீற்றர் தூரம் வரை செல்லும் வல்லமை மிக்கவை. தனக்கொரு நீதி, மற்றவர்க்கொரு நீதி என்னும் வகையில் தொடர்ந்தும் அமெரிக்கா நடக்க முனையுமானால் நட்டம் அமெரிக்காவிற்கே என்பதைத் தான் அண்மைய அமெரிக்காவின் இந்தியா மீதான தடைகள் வெளிக்காட்டுகின்றன. இதனால் பயனடைந்தவை ஜரோப்பிய நாடுகளும் ரஷ்யாவுமே. தன்னையொரு உலகப் பொலிஸ்காரனாக மார்தட்டிக் கொள்ளும் அமெரிக்காவின் தென்னாசிய நிலைப்பாடுகளிற்குக் கிடைத்த தோல்விகளிலிருந்து பாடம் படிக்க அமெரிக்கா தவறுமானால் நட்டம் அதற்குத்தான்.

ஒரு தீர்ப்பும் தொடரும் தமிழ் மக்கள் இடரும்

மாணவி கிரிசாந்தியைக் கற்பழித்துக் கொலை செய்த இராணுவத்தினரிற்குத் தூக்காம். சர்வதேச மன்னிப்புச் சபை கூட சிறிலங்கா அரசைப் பாராட்டி விட்டதாம் என்று அளவிற்கு மீறி மகிழ்ந்து விடாதீர்கள். சர்வதேச நாடுகளின் நிர்ப்பந்தங்களிற்கு பணிந்து போன சிறிலங்கா அரசு தன்னையொரு நியாய வாதியாக காட்ட மட்டுமே இவை உதவக்கூடும். சொந்த மண்ணிலோ தமிழ் பெண்கள் மீதான சிறிலங்கா இராணுவத்தினரின் பாலியல் வன்முறைகள் தொடர்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உண்மையிலேயே சிறிலங்கா அரசு தமிழ் மக்களிற்கு நல்லது செய்ய விரும்பினால் உடனடியாக வடக்குக் கிழக்கில் குவித்து வைத்திருக்கின்ற அதன் படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும். சிறைகளில் விசாரணைகளின்றி வாடும் கைதிகளை விடுவிக்க வேண்டும். எந்த வித நிபந்தனைகளுமற்று போர் நிறுத்தத்தினை மேற்கொண்டு நிரந்தர தீர்வுக்கான பேச்சு வார்த்தைகளைத் தொடங்க வேண்டும். தற்போதைய இந்திய அரசியல் சூழல் ஈழத்தமிழ் மக்களிற்கு சார்பான பல கூறுகளைக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதனை ராஜதந்திரமாக பாவிப்பதன் மூலம் சிறிலங்கா அரசிற்கு அரசியல் ரீதியில் பெரும் பாரிய நிர்ப்பந்தங்களை பிரயோகிக்க வாய்ப்புக்களுள்ளன. இதனை நாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஏற்கனவே வாய்ப்பொன்று வந்தது. தவறவிட்டுவிட்டோம். இப்பொழுது இன்னொரு வாய்ப்பு வந்துள்ளது. தவறவிட்டு விட்டால் பின்னால் வருத்தப்பட நேரிடும். இதனை சிறிலங்கா அரசும் உணர்ந்துள்ளது. அதனால் தான் விழுந்தடித்துக் கொண்டு அமெரிக்க எதிர்ப்பையும் மீறி இந்தியாவின் அணுகுண்டுப் பரிசோதனை விடயத்தில் ஆதரவான கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

"எழும் பசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி"
— பாரதியார் —

இரவி மலர் 1 இதழ் 2
ஆடி 14. 1998 — ஆவணி 14.1998

ஆசிரியர் வ.ந.கிரிதரன்

நாட்டு நடப்பு

காலச்சுவடு கருத்தரங்கு

அண்மையில் 'காலத்'தின் சார்பாக் காலச் சுவடு இதழ் சம்பந்தமான கருத்தரங்கு மல்வேர்ன் சமூக நிலையத்தில் நடைபெற்றது. காலம் ஆசிரியர் செல்வம் ஏற்பாட்டில் நிகழ்ந்த நிகழ்வில் பூரணி மகாலிங்கம் நல்லதொரு ஆய்வுரையினை வழங்கினார். கலாநிதி பார்வதி கந்தசாமி, விரிவுரையாளர் ராஜேந்திரன், மொன்றியால் மைக்கல், குமரன், பாரதி மோகனுட்படப் பல இலக்கியப் பிரமுகர்கள், ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்தனர். இது போல் கனடாத் தமிழ் இலக்கியச் சூழல் சம்பந்தமான அமர்வுகளையும் நடத்தினால் என்ன? எடுத்தற்கெல்லாம் நம்மவர் படைப்புக்களையிட்டு முகாரி பாடுவதை நிறுத்திப் பூபாளமிசைத்தாலென்ன. அத்தகையதொரு பூபாளம் பயனுள்ளதொரு நிகழ்வாக அமையும் சாத்தியம் உண்டு. நூல் வெளியீடு, நாடகத் துறைப் பங்களிப்பு, காலம் சிற்றிதழ் வெளியீடு, புத்தகக் கண்காட்சியென பாடுபடும் 'காலம்' செல்வம் கவனிப்பாரா?

பிரசாத்திற்கு குரல் ஒரு வரப்பிரசாதம்

தற்செயலாகக் கீதவாணியில் நம்மவர் குரலொன்றைக் கேட்கும் வாய்ப்பு கிட்டியது. கனடாத் தமிழ் இலக்கிய, இசைத் சூழலில் நன்கு அறிமுகமான ஆனந்த பிரசாத்தின் குரல் தான் அது. குரலா அது!!! என்ன மாதிரி வளைந்து, குழைந்து பசிரில்லாமல் வழிந்தோடுகின்றது. இவ்வளவு திறமையையும் தமிழகத்தில் காட்டினால் நிச்சயமாக இன்னொரு ஜேசுதாஸ் உருவாகும் வாய்ப்பு உண்டு. பிரசாத்திற்குக் குரல் ஒரு வரப்பிரசாதம் தான். வாழ்த்துக்கள். பயணம் தொடரட்டும்.

ஜாவா என்றொரு மொழியில்.....

சரியான போட்டி. கீதவாணியின் "கணணியும் நீங்களும்" நிகழ்ச்சியில் தனது புலமையினைக் காட்ட வந்த அன்பரொருவர் கணணி மொழிகளில் ஒன்றான ஜாவாவினை மொழியல்ல ஒரு சாதனம் என்று சொல்லப் போய் இறுதியில் ஆப்பிழுத்த குரங்காக மாட்டிக் கொண்டு முழித்தது தான் பெரிய சிரிப்பு. கணணி மொழிகள் பற்றிய போதிய பாண்டித்தியம் இல்லாது விட்டாலும் சிங்கப்பூர் மோகனிற்கும் ராஜா சொக்கலிங்கத்திற்கும் தர்க்க ரீதியாக ஜாவா ஒரு மொழிதான் என்பது புரிந்திருக்கின்றது. பாவம் மெத்தப் படித்த அந்த அன்பரிற்குப் புரியாது போனது தான் விசித்திரம். கணணி 'புறொகிறாமிங்' துறையில் ஏற்பட்ட வளர்ச்சிப் பாதையின் இன்னுமொரு மைல் கல் தான் இந்த 'பொருள் சார்ந்த புறொகிறாம்' (Object-Oriented Program) என்பதுவும். ஜாவா என்பது இத்தகையதொரு 'புறொகிறா'மே. அதற்காக அதுவொரு மொழியல்ல வெறும் சாதனம் தான் என்று வாதிடுவது சிறுபிள்ளைத் தனமானது. எல்லா மொழிகளுமே சாதனங்கள் தான். அதிலென்ன ஆச்சர்யமிருக்கின்றது!!!

" Despite all the hipe surrounding Java and the new features of Java1.1, it's important to remember that at its core, Java is just a programming language, like many others, and its APIs are just class libraries, like those of other languages..."
-David Flanagan இன் "JAVA IN A NUTSHELL"
— புத்தகத்திலிருந்து —

நெஞ்சைப் பாதித்த சிறுகதை...

அண்மையில் நான் வாசித்த சிறுகதைகளில் என் செஞ்சை ஆழமாகப் பாதித்த சிறுகதை இது. 'கடற்கரையில்..' டாக்டர் தே. சகாயதாஸினால் மொழியாக்கம் செய்யப்பட்ட ஓ.வி.விஜயனின் மலையாளச் சிறுகதையிது. புதியபார்வை யூன்16 — 30 இதழில் வெளிவந்திருக்கின்றது. வெள்ளாயியப்பக் கிழவன் தூக்குத்தண்டனைக் கைதியான மகன் கண்டுண்ணியை இறுதியாகப் பார்க்கச் செல்வதை கதை விபரிக்கின்றது. இறுதியாக மகனைச் சந்தித்து விட்டு, மறுநாட் காலை தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டபின் மகனின் உடலைப் பொறுப்பேற்று பட்டணத்திற்கப்பால் விரிந்து கிடக்கும் நிலப்பரப்பில் அதனைப் புதைத்து விட்டு, மகனிற்காகத் தாய் கொடுத்து விட்ட கட்டுச் சோற்றையும் எறிந்து விட்டுச் செல்வதாகச் செல்லும் கதை படிப்பவர்கள் இதயத்தையே ஒருகணம் அதிர வைத்து விடுகின்றது. அந்தத் தந்தையின் துடிப்பை என்ன மாதிரி கதாசிரியர் விபரித்து விடுகின்றார். தூக்குத் தண்டனையை ஆதரிப்வர்களையும் ஒருகணம் சிந்திக்க வைத்து விடுகின்ற கதை. வாசித்ததிலிருந்து இன்னும் என் நெஞ்சைப் போட்டு வதைத்துக் கொண்டேயிருக்கின்றது.

வாசகர்களிற்கு ஒரு வேண்டுகோள்...
டொராண்டோவில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் சென்று பார்க்கும் சாத்தியம் அரிது. அதனால் இப்பகுதியில் இங்கு நடைபெறும் நிகழ்வுகளைப் பற்றிய குறிப்புகளை வெளியிட விரும்புவர்கள் எமக்கு அனுப்பி வைக்கலாம். வெளியிடுவோம்

இரவி

மாதமொருமுறை
"எழும் பசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி"
— பாரதியார் —

பிரதம ஆசிரியர் வ.ந.கிரிதரன்

ஆலோசனைக் குழு

கடல் புத்திரன்
எஸ். தாசன்
அகஸ்டின்

வடிவமைப்பு

வ.ந.கிரிதரன்

அச்சுப் பதிவு
செல்வி

வெளியீடு
Webcom Communications
476 Parliament Street, Suite201
Toronto M4X 1P2

ISSN 1481-1189

விளம்பரம்


அந்தனி
மணிவண்ணன்

விநியோகம்
பாலமுரளி
தரன்

தொடர்புகளிற்கு
Webcom Communications
476 Parliament Street, Suite201
Toronto M4X 1P2
Tel:416-924-6456
e-mail:gthami@pathcom.com

கணனி பற்றிய கட்டுரைத் தொடர்

கணனி கற்போமா?



கணனி சில அடிப்படைச் சொற்களும், விளக்கங்களும்.

— ஈஸ்ட் யோர்க் கிருஷ்ணன். —

கணனி கற்போமா என்னும் இப் பகுதி கணனித் துறையில் பாண்டித்தியம் பெற்றவர்களிற்கான பகுதியே அல்ல. கணனி பற்றிய அடிப்படை அறிவே இல்லாதவர்களிற்காக, அவர்களிற்குச் சரியான கணனி பற்றிய அறிவிற்கான அடித்தளமொன்றை அளிப்பதற்காக இப் பகுதியிலுள்ள விடயங்கள் அமையும். இவ்விதழில் கணனி பற்றிய பல அடிப்படையான விடயங்களும் அவற்றிற்கான சொற்தொடர்களும் இடம் பெறும்.

கம்யூட்டர் என்றதும் காட்வெயர் சாவ்ட்வெயர் என்ற விடயங்கள் ஞாபகத்திற்கு வராமல் போகாது. காட்வெயரைத் தமிழில் வன்பொருள் என்று கூறலாம். இது போல் சாவ்ட்வெயரை மென்பொருள் எனலாம். இது போல் கம்யூட்டர் புறொகிறாம்களை கம்யூட்டர் ஆணைத்தொடர்கள் எனக் கூறலாம். Programming Languagesஐக் கம்யூட்டர் ஆணைத்தொடர் மொழிகள் எனவும் கூறலாம். இதைத் தவிரக்கம்யூட்டரின் உள்ளே கழட்டிப் பார்த்தால் பச்சையான போர்டு ஒன்றிருக்கும். இது தான் கம்யூட்டரின் மிக முக்கியமான பகுதி. இதனை மதர் போர்டு (mother board) என்பர். தமிழில் தாய்ப்பலகை எனலாம். இந்த போர்டில் செங்குத்தாகப் பல சிறிய போர்டுகள் நீட்டிக் கொண்டிருக்கும். இந்த உபரிப் பலகைகளை Add-on-cards என்போம். மோனிட்டர் திரையில் சகல விடயங்களையும் வெளிப்படுத்தப் பாவிக்கும் வீடியோ கார்டுகள் (Vedio cards), பிறிண்டர், ப்பிளாப்பி டிஸ்க் (Floppy disks) ,ஹார்ட் டிஸ்க், போன்றவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் IDE கார்டுகள் இவையெல்லாம் இந்த add-on-cards வகையில் வருவன.

மதர் போர்டில் பல chips காணப் படும். இவை IC (integrated circuit) எனப் படும். தமிழில் சிலிக்கன் சில்லுகள் எனலாம். கணனியின் மூளையாகக் கருதப்படும் மைக்ரோ பிராஸசர் (micro processor) இத்தகையதொரு சிலிக்கன் சில்லே. இதனை CPU (Central processing unit) என்றும் சொல்லுவார்கள். CPU என்றால் Central Processing Unit என்பது பொருள். கணனியில் நடைபெறும் கூட்டல், கழித்தல் உட்பட சகல செயல்களையும் நடுநாயமாக நின்று இயக்கி வைக்கும் ஆசான் இந்த மைக்ரோ பிராஸசர் சில்லுதான். இதன் வேகத்தை வைத்து 286, 386, 486, பென்டியம் என்று பலவாறு அழைப்பார்கள். 80486ஐத் தான் 486 எனறு அழைப்பார்கள். கணனியில் தகவல்களைத் தற்காலிகமாகச் சேகரித்து வைக்கும் நினைவகப் பகுதியொன்றுண்டு. இதனை 'ராம்'(RAM) என்பார்கள். Random Access Memoryயின் சுருக்கம் தான் இது. இது தற்காலிகமானது. கம்யூட்டர் நிறுத்தப் பட்டதும் இது அழிந்து விடும். இன்னொரு நினைவகப் பகுதியொன்றுண்டு. இது அழியாதது. இதனை 'ரோம்' ROM என்பார்கள். Read Only Memoryஐத் தான் இவ்விதம் கூறுவார்கள். 'ராமை'யே பொதுவாக 'மெமரி' என்போம்.

கணனியின் சகல பாகங்களையும் பிரிண்டர், சிடி ரொம், பிளாப்பி டிஸ்க் போன்ற எல்லாவற்றையுமே பொதுவாகக் காட்வெயர் என்போம். இது போல் கணனியில் பாவிக்கப் படும் எல்லாவகையான 'புறொகிறாம்'களையும் , வின்டோஸ் 95யுட்பட கணனியின் மென் பொருள் அல்லது 'சாவ்ட் வெயர்' என்போம். இந்த மென்பொருட்களில் மிகமுக்கியமான மென் பொருள் கணனியை இயக்கப் பாவிக்கப் படும் மென் பொருள். இதனையே 'ஆபரேட்டிங் சிஸ்டம்' , OS , Operating System என்பர். DOS (Disk operating system) அல்லது 'டாஸ்' என்பது ஒரு 'ஆபரேட்டிங் சிஸ்ட'மே. வின்டோஸ் 95 யும் இவ்விதம் ஒரு ஆபரேட்டிங் சிஸ்டமே. MS DOS அல்லது MS Windows இலிலுள்ள MS என்பது Micro Soft நிறுவனத்தைக் குறிக்கும்.

(அடுத்த மாதம் மேலும் பல சுவையான விடயங்களுடன சந்திப்போமா?)



பாப்பா மலர்

— தயாரிப்பு மாலா அக்கா —

எதியோப்பியக் கதை

கழுதை செய்த பாவம்

காட்டில் பஞ்சம் தலை விரித்தாடத் தொடங்கியது. எங்கும் வரட்சி. மிருகங்களெல்லாம் மடியத் தொடங்கின. ஒரு நாள் பசியால் வாடிய சிங்கமொன்றும் புலியொன்றும் ஓநாயொன்றும் கழுதையொன்றும் மரமொன்றினடியில் சந்தித்துக் கொண்டன.

சிங்கம் கூறியது " இந்தக் காட்டில் இப்படிப் பஞ்சம் வரக் காரணம் நம்மில் யாரோ ஒருவர் செய்த பாவம் தான்"

சிங்கம் தொடர்ந்து கூறியது " ஒரு முறை பசியால் வாடிய மாடொன்றைக் கொன்று சாப்பிட்டு விட்டேனே"

இதற்கு மற்ற மிருகங்கள் கூறின "அதெப்படி பாவமாகவிருக்க முடியும்"

பின்னர் புலி கூறியது "இப்படித்தான நானுமொரு மான் குட்டியைப் பிடித்துச் சாப்பிட்டு விட்டேன். நானே அந்தப் பாவி"

இதற்கும் மற்றைய மிருகங்கள் கூறின "அதெப்படி பாவமாயிருக்க முடியும்"

பின்னர் ஓநாய் கூறியது "அப்பாவி ஆடொன்றைக் கொன்று சாப்பிட்டு விட்டேன். நானே அந்தப் பாவி"

இதற்கும் ஏனையவை மறுப்புத் தெரிவித்தன.
கழுதையின் முறை வந்தது. அது கூறியது

" ஒருமுறை இன்னொருத்தன் காணியொன்றிலிருந்த புல்லை பசியால் உண்டு விட்டேன். நானே அந்தப் பாவி"

இதைக் கேட்ட மற்றைய பலம் வாய்ந்த மிருகங்கள் ஒன்றையொன்று நோக்கின. பின்னர் ஏககாலத்தில் அவை கூறின "உண்மைதான் . நீ சொல்வது உண்மைதான். எல்லாப் பிரச்சினைக்கும் காரணம் நீயே"

இவ்விதம் கூறிய அவை அப்பாவிக் கழுதையைக் கொன்று சாப்பிட்டுப் பசியாறின.
வலியவனிற்கொரு நீதி. எளியவனிற்கோ இன்னுமொரு நீதி.

பாலர் கவிதை

சங்குச் சக்கர சாமியாம்

— குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா —

சங்குச் சக்கர சாமியாம்
சாய்ந்து படுத்து கிடக்குமாம்.
எங்கு, எங்கே தெரியுமா?
எங்கள் ஊர்க் கோயிலில்.

நீட்டிப் படுத்துக் கிடக்குமாம்.
நில வண்ணச் சாமியைப்
பாட்டுப் பாடி எழுப்பலாம்.
கூட்டமாக வாருங்கள்.

சினிமா

வித்தியாசமான அபர்ணாசென்.



தங்களுடைய திறமையை முற்றிலுமாக வெளிப்படுத்தும் நடிகைகள் மிகவும் அபூர்வம். அழகையும் வெற்றியையும் ஒருங்கே கொண்டுள்ள அபர்ணாசென் நடிப்பை விட்டுவிட்ட பிறகு தன்னுடைய முழுக்கவனத்தையும் திரைப்படத் தயாரிப்பில் செலுத்தத்தொடங்கி விட்டார். அவர் இயக்கிய '36, சௌரங்கி லேன்', வெற்றியைத் தொடர்ந்து 'பரோமா', 'பிக்னிக்', 'சதி' போன்ற படங்களைத் தானே தயாரித்த அபர்ணா சென்னின் சமீபத்திய படமான 'யுகந்த்' திருவனந்தபுரத்தில் நடைபெற்ற திரைப்பட விழாவின் போது இடம் பெறுவதில் பிரச்சினையை சந்திக்க வேண்டியதாயிற்று. ஆனால் வர்த்தக ரீதியில் கல்கத்தாவில் திரையிட்டபோது அரங்கு நிறைந்த காட்சிககளால் வசூலை அள்ளித் தந்திருக்கின்றது.

இவரது தந்தை சிதானந்ததாஸகுப்தா சிறந்த சினிமா விமர்சகராகவும், சரித்திரத்தில் நாட்டமுள்ளவராகவும் இருந்ததால் அபர்ணா சென் கலபமாகத் தன்னுடைய கருத்துக்களை திரைப்படங்களில் வெளியிட முடிகிறது. எப்போதோ தன்னுய்ய தாய் சொன்ன ஒரு கதையின் கருவை வைத்து படமெடுக்க வேண்டுமென்று நினைத்த திட்டம் இடையில் நிகழ்ந்த வளைகுடாப் போர், பாபர் மசூதி கலவரங்கள் போன்றவை இவரது மனமை மிகவும் பாதித்து விட்டதால் முதலில் திட்டமிட்ட படத்ரத எடுக்க விடாமல் போய்விட்டதாம். அதற்குள் 'சதி' படத் தயாரிப்பில் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. சுற்றுப்புறச் சூழல், பூமிக்கேற்பட்டு வரும் வெயது அதிகரிப்பு, குறைந்து வரும் கருத்து வெளிப்பாடுகள் போன்ற பலவகைக் கருத்துக்களை 'யுகந்த்' படத்தில் சொல்லியிருக்கின்றார். 'கம்யூனிஸம்' நன்கு செயல் பட்டு வந்தாலும் நடைமுறையில் அதற்குத் தோல்விதான். முதலாளித்துவத்திற்கு எதிர் கட்சியாகவே செயல் பட வேண்டியிருக்கின்றது. இன்று நம்முடைய எதிர் பார்ப்புகளிற்கு எதுவுமே சாத்தியமில்லை. கனவுகள் தான் மிச்சம். பெண்களிற்கும் இதில் சமபங்கு உண்டு என்பதைத்தான் இதில் உணர்த்தியிருக்கின்றேன். வியாபரத்தனமான வாழ்க்கைக்கு நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வளவு ஏன்? என்னை நானே இருவகைப் படுத்திக் கொண்டேன். ஒரு ஆணிடம் நாம் மட்டும் ஏன் தேடிச்செல்ல வேண்டும்? அவனும் பெண்ணை நாடி வரட்டுமே என்பதுதான் கேள்வி. பெண்களின் பிரச்சினைகளிற்கு இதுவும் ஒரு தீர்வாக அமையலாமல்லவா என்று எனக்குத் தோன்றியது. இந்த அனுபவப் பட்ட கருத்துக்கள்தான் 'யுகந்த்' படத்தைத் தயாரிக்கத் தூண்டியது என்கின்றார் அபர்ணாசென்.

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் அளித்த உதவித் தொகையுடன் தன்னுடைய

அ.குமார் நன்றி 'புதிய பார்வை'

முயற்சிகளால் கிடைத்த 'ஸ்பான்ஸர்' உதவிகளையும் கொண்டு இந்தப் படத்தைத் தயாரித்துள்ள அபர்ணா, ஏற்கனவே வங்க மொழியில் வெளிவரும் 'சனந்தா' என்கின்ற பெண்கள் பத்திரிகையின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றிருக்கின்றார். பத்திரிகை அனுபவம் பற்றி என்ன சொல்லுகின்றார்?

"பத்திரிகை ஆசிரியராக இருப்பது ஒரு வகையில் திரைப்படத் துறையில் தயாரிப்பாளராகவிருப்பதற்கு தெளிவாக உதவுகின்றதென்றே சொல்லலாம். எந்த விதமான அச்சுறுத்தல்களிற்கும் அடிபணியத் தேவையில்லை என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சியாகவேயிருக்கின்றது. வதந்திச் செய்திகளை வெளியிடுவதில் எனக்கு விருப்பமில்லை. சமீபத்தில் கவிதைப் பகுதி ஒன்றை அறிமுகப்படுத்தினேன். நுல்ல வரவேற்பு கிடைத்திருக்கின்றது. இதனால் இந்தப் பத்திரிகை ஒரு இலக்கியத்தரத்திற்கு உயர்ந்திருக்கின்றது. கூடவே கொஞ்சம் கிளாமரும் உண்டு. ஆனால் இடைப்பட்ட வரிகளைப் படிக்கும் போது நிச்சயம் வித்தியாசம் தெரியும். இது தான் என்னுடைய பங்கு" என்கிறார் அபாணாசென்.இவர் கடைசியாக நடித்து வெளிசந்த 'உன்னிஸ் ஏப்ரல்' என்கிற திரைப் படம் தேசிய விருது பெற்றிருந்தாலும், மீண்டும் நடிப்பதில் ஆர்வம் காட்ட மறுத்து விட்டார். ஏன்?

"நடிப்பது என்பது அதிகப்படியான நேரத்தை எடுத்துக்கொள்கிறது. ஏனக்குக் கிடைத்த பாத்திரங்களும் பிடிக்கவில்லை. அது போன்ற படங்களைத் தயாரிப்பதும் எனக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது படத்தில் நடிக்கும் போது கூட பணத்திற்காகத்தான நடிக்கின்றோமென்பதும், யாரோ ஒருவருடைய மனத்திருப்திக்காகவே நடிக்கின்றோமென்கிற உணர்வும் எனக்குள் ஏற்படுவதுண்டு. ஆதனால் தான் டைரக்ஷன் துறை ஒன்று மட்டுமே போதுமென்று ஒதுங்கி விட்டேன். படங்களைத் தயாரிக்க எனக்கு நேரம் தேவை. உண்மையில் அதைத்தான் நான் பெரிதும் நேசிக்கின்றேன்" என்று சொல்லும் அபர்ணா உண்மையிலேயே வித்தியாசமானவர் தான்.

வாசகர் கடிதங்கள்

மோகநிலாவின் ஆரம்பமே அலாதி. அருமையான நெஞ்சையள்ளும் நடை. பாராட்டுக்கள்.

— வசந்தா, ஸ்காபரோ —

இரவியின் உதயம் பிரகாசமானதாகத் தெரிகிறது. கருத்தாழமிக்க விடயங்கள். செய்திகளிற்குப் பதிலாகப் செய்திக் கண்ணோட்டம் போட்டால் நன்றாக இருக்கும்.

— வல்முருகன் எட்டபிக்கோ —

பத்திரிகையின் வடிவமைப்பில் கவனம் செலுத்தவும். அ.ந. கந்தசாமியின் "வெற்றியின் இரகசியங்கள்" அனைவரும் படிக்க வேண்டிய தொடர். அமரர் அ.ந.கந்தசாமியை இன்றைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தியுள்ளீர்கள். எனது பாராட்டுக்கள். மோகநிலாவின் முதல் அத்தியாயமே இங்கு வாழும் நம்மவரைத் தட்டியெழுப்பும். ஆசிரியரின் எழுத்து நடை நெஞ்சைத் தொடும் அருமையான நடை.

— ரவிச்சந்திரன் ஸ்காபரோ —

அ.ந.க. வின் கட்டுரைத் தொடர், வ.ந.கிரிதரனின் மோகநிலா, ரதனின் சினிமா பற்றிய கட்டுரை கவிதைகள் எல்லாமே நன்றாக இருந்தன. தொடருங்கள். ஆதரிப்போம்.

— லலிதா நோத்யோர்க் —

சிந்தனைக்கு விருந்தளிக்கும் இரவியே! நீ வாழ்க! வாழ்க!

— பொன்னுத்துரை வெலஸ்லி —

கடிதங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும் அன்பான வாசகர்களே உங்கள் கருத்துக்களுடன் உங்கள் முழுப்பெயர், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றையும் அறிவிக்க மறந்து விடாதீர்கள்.

இரவிக்கு தமிழ் மக்களின் அமோக ஆதரவு கண்டு பூரித்துப் போய் நிற்கிறோம். தொடர்ந்து கொண்டு அன்பான ஆலோசனைகள் கூறிய அனைத்து நல்லுள்ளங்களிற்கும் எமது உளங்கனிந்த நன்றிகள். இரவியில் வரும் விடயங்கள் அனைத்துமே சிந்தனைக்கு விருந்தளிப்பனவையாக அமையும். சேர்த்து வைத்திருங்கள். நிச்சயம் பயனடைவீர்கள்.

தேசிய பாதுகாப்பும் பயம் பற்றிய அரசியலும்.

கலாநிதி ராஜ்மோகன்

யுத்தங்கள் செய்யப்படுவதற்கான அடிப்படைக் காரணம் தேசியத்தின் பாதுகாப்பே என்ற கவர்ச்சியான வாதம் போரிடுபவர்களாலும், அரசியல் யதார்த்தவாதிகளாலும் அடிக்கடி முன்வைக்கப் படுவது வழக்கம். அத்தகைய யுத்தங்களை தொடர்ச்சியாகவும் செம்மையாகவும் நடாத்த நியாயமான ஒழுங்கும், நிதியும், நிறுவன அமைப்பும் அவசியமாகின்றன. யுத்தங்களை ஒழுங்கற்ற முறையில் தன்னிச்சையாகச் செய்ய முடியாது என்பதால் அவற்றை நெறிப்படுத்துவதற்கு யுத்த அல்லது இராணுவ நிறுவனங்கள் பல கட்டுமானங்களாக நிர்ணயிக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டு வருவது வழக்கம். இதன் அடிப்படையிலேயே அரசுகள் பொருளாதார நிதியுதவிகளை இவைகளிற்கு வழங்கியும் மேற்பார்வை செய்தும் வருகின்றது. இங்கு யுத்த அல்லது இராணுவ நிறுவனங்கள் என நான் கூறும் போது "ஆயுதப் படைகள், இராணுவக் கல்வி மற்றும் பயிற்சிக்கூடங்கள், இவற்றுடன் தொடர்புள்ள பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள், ஆயுதங்களை உருவாக்கும் விஞ்ஞான பரிசோதனைக் கூடங்கள், ஆயுதப் பரிசோதனைகள், ஆயுதக் கனிப்பொருள் வளங்கள், ஆயதத் தொழிற்சாலைகள், இராணுவ உணவுக் களஞ்சியங்கள், ஆயுதக் களஞ்சியங்கள், சர்வதேச ஆயத வர்த்தகங்கள், ஆயுத விநியோகங்கள், இராஜதந்திர நடவடிக்கைகள், உளவு வேலைகள், கூலிப்படைப் பிரிவுகள், கொலைப்படைப் பிரிவுகள், யுத்த பிரசாரம் தொடர்பு பட்ட புத்திஜீவிகள், பத்திரிகைகள், தொலைதொடர்பு சாதனங்கள், நிர்வாக வேலைகள் ஆகிய அனைத்தையும் இணைத்துக் குறிப்பிடுகின்றேன்.

யுத்தங்கள் எப்போது ஏற்படும் என்று பல சந்தர்ப்பங்களில் எதிர்வு கூற முடியாததாலும், யுத்தத்திற்கு ஓர் நாட்டினை ஒரே இரவில் தயார் செய்ய முடியாது என்பதாலும், இந்த யுத்த நிறுவனங்களைச் சமாதானக் காலங்களிலும் கட்டியமைத்துப் பேணி வளர்த்து வருவது வழக்கமாய் மாறியது. இவ் வழக்கம் தேசிய பாதுகாப்பின் தேவை கருதியே செய்யப் படுகின்றது என பொதுவாக நியாயப் படுத்தப் படுகின்றது. ஆனாலும் ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு வெறுமனே யுத்த நிறுவனங்களாலும், யுத்தங்களாலும் தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருகின்றதா என்ற கேள்வி எமக்குள் என்றும் எழக் கூடிய ஒன்றே. யுத்த ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான செலவும், ஆயுதத் தொழில் நுட்பங்களின் வீச்சும், அதனால் ஏற்படும் பாரியதாக்கங்களும் பெருகி வரும் இக்காலகட்டத்தில், ஒரு நாட்டின் இராணுவப் பாதுகாப்பு அந் நாட்டின் அந் நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பு, புறச் சூழலியலுக்கான பாதுகாப்பு, பிரஜைகளின் மன ஆரோக்கியத்துக்கான பாதுகாப்பு என்பனவற்றிற்குச் சாதகமாக உள்ளதா அல்லது பாதகமாக உள்ளதா என்ற கேள்விகளும் உள்ளன. மேலும் பாதுகாப்பு என்ற விடயத்திற்கும் பொதுமக்களின் பொதுவான பயங்களிற்கும் உள்ள தொடர்புகளும் என்ன என்ற கேள்விகளும் உள்ளன. இத் தொடர் கட்டுரையின் நோக்கம் இவ்வாறான கேள்விகளை தொட்டு ஆய்வதும், அவை தொடர்பான கருத்துக்களை முன் வைப்பதுவுமே ஆகும்.

பாதுகாப்பு என்ற கருத்தின் முக்கியத்துவம்

உலகெங்கும் இடம்பெறும் யுத்தங்கள் பொதுவாக தற்பாதுகாப்பு என்ற வாதத்தின் அடிப்படையிலேயே நியாயப்படுத்தப்பட்டு வருவதனால், தேசிய சர்வதேசிய அரசியலில் பாதுகாப்பு என்ற விடயம் அதியுயர்ந்த அந்தஸ்தைப் பெற்று வருகிறது. தேசிய விடுதலைப் போராட்டங்கள் பற்றிய நியாயங்களிலும் இவ்வாதம் விதிவிலக்கானது அல்ல. ஓர் நாட்டின் பிரஜைகளை, எல்லைகளை, வளங்களை, மற்றும் பிற நலன்களை பாதுகாப்பது என்பது ஒவ்வொரு நாட்டு அரசாங்கத்தினதும் பாரதூரமான கடமை என்பதனால் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வது என்பது வெறுமனே ஒரு அரசியல் கடப்பாடு என்பது மட்டுமல்லாது அது தலைவர்களின் அரசியல் ஒழுக்கக் கடப்பாடாகவும் விளங்குகிறது.

இதே வேளை போரில் ஈடுபடும் நாடுகள் அல்லது போராட்டக்குழுக்கள் தமக்குள் பல்வேறு தனிப்பட்ட நலன்கள், தவறுகள், முரண்பாடுகள், குறைகள் இருக்கத்தக்க, தமது தற்பாதுகாப்பு அல்லது தாக்குதல் யுத்தத்திற்கான உண்மையான காரணம் பொதுமக்களின் பாதுகாப்பே எனக் கூறுவதும் சரித்திரங்களில் என்றும் காணக்கூடிய ஓர் பொதுவான விடயம். இவ்வாறான ஒரு நியாயத்தை போரில் ஈடுபடும் தலைவர்கள் முன்வைப்பதற்கான அடிப்படைக்காரணம் ஒன்று உண்டு. பொதுமக்கள் தாம் அநாவசியமாக ஓர் யுத்தத்தில் ஈடுபடுவதையோ அல்லது தமது சகாக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதையோ விரும்புவதில்லை. அதேவேளை தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் வரும் பட்சத்தில் அவர்கள் யுத்தத்தை ஆதரிக்க முன்வருவர். இதனால் நாட்டில் தலைவர்கள் அல்லது

சென்டானியல் கல்லூரியின் கலைமாலைப் பொழுது 98 ஓர் கண்ணோட்டம்

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு அல்லலுறும் எம்மக்களுக்கு அத்தியாவசியமானதொன்றாகும். இதற்காக கனடாவிலுள்ள தமிழ் மாணவர் அமைப்புகள் முன்னின்று செயற்படுவது பாராட்டத்தக்க ஒன்று. இதன் அடிப்படையில் சென்ரனியல் கல்லூரி தமிழ் மாணவர் மன்றத்தினால் கலைமாலைப்பொழுது பல்சுவை நிகழ்ச்சி வருடந்தோறும் நடத்தப்படுவது யாவரும் அறிந்ததே. அதேபோல் இம்முறையும் கலைமாலைப் பொழுது 1998 கடந்த சனியன்று (20-6-98) winstonchurchill கல்லூரி கலையரங்கில் இடம் பெற்றது.



அவர்களின் முற்போக்கான எண்ணங்களை வரவேற்கும் இதே வேளையில் அன்றைய நிகழ்ச்சியின் குறைகளையும் நிறைகளையும் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

குலோத்துங்கன்

யாவரும் எதிர்பார்க்காத வண்ணம் குறித்த நேரத்தில் தமிழ் தலைவர் வே. பிரபாகரன் (ஒலிநாடாவில் பதிவுசெய்யப்பட்ட) சிறப்புரையுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து கனடா தேசிய கீதமும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் அடுத்த நிகழ்வுகளாக நடைபெற்றன. இதனை அடுத்து சிறப்பு விருந்தினர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்தார். நிகழ்ச்சியில் அறிவிப்பாளர் திரு. சத்தியநாராயணாவை எதிர்பார்த்து வந்தவர்களுக்கு சென்ரானியல் கல்லூரி தமிழ் மாணவனும், கீதவாணி புகழ் இரட்டையர்களில் ஒருவரான மோகன்ராஜ் நடராஜாவின் வர்ணனை மிகுந்த நிறைவைக் கொடுத்ததை அவதானிக்க முடிந்தது.

மேடை அறிவிப்பாளராக முதன்முதலில் தோன்றி, நிகழ்ச்சியை கலகலக்க வைத்த அறிவிப்பாளரின் பங்கு அளப்பரியது. இதனைத் தொடர்ந்து மயில் நடனம், பந்து நடனம், கிராமிய நடனம், திரை இசை நடனங்கள் வரையறுக்கப்பட்டளவில் இடம்பெற்றது ரசிக்கக்கூடியதாக இருந்தது. உலகத்தமிழர் கலைப்பண்பாட்டுக் கழகத்துடன் சென்ரனியல் கல்லூரி தமிழ் மாணவர்கள் இணைந்து வழங்கிய "விடுதலை இன்பம்" நாடகம் மிகுந்த கருத்துள்ளதாகவும், பலகோணங்களிலும் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்ததை அவர்களின் கண்களின் கண்ணீர் பறைசாற்றியது. ஆங்காங்கே ஒலிவாங்கிகளின் பிசிறல்களுக்கு மத்தியிலும் கலைஞர்களின் நடிப்பாற்றல் மேலோங்கி நின்றது மிகவும் சிறப்பம்சம். தொடர்ந்த பல மேடை அனுபவம் உள்ளவர்களால் வழங்கப்பட்ட நகைச்சுவை நாடகம் அரங்கை மீண்டும் கலகலப்பாக்கியதுடன் பாரி பரம்பரையாம் எம்மக்களுக்கு வாரி வழங்க ஓர் வாய்ப்பை கொடுத்தது. மாணவர்களின் மாறுபட்ட எண்ணத்தில் உருவாக்கப்பட்ட "talk show" நிகழ்ச்சியானது இதுவரை எம்மேடையிலும் காணாத ஒரு வித்தியாசமான நிகழ்ச்சியாகவும் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றதாகவுமிருந்தது. இறுதியில் இடம் பெற்ற சுப்பர் கீட்ஸ் குழுவினரின் இசைவளமும், பாடகர்களின் குரல் வளமும் இணைந்து வழங்கிய அமுத மழையில் ரசிகர்கள் நனைந்து சென்றது அவர்களின் விமர்சனங்கள் மூலம் அறிந்து கொண்டேன். விழாவின் ஆரவாரத்தில் ஒருங்கமைப்பாளர்கள் நன்றியுரையை மறந்து விட்டார்கள் என்று எண்ணும் பொழுது காலைமாலைப் பொழுது 1998 மலரில் நன்றியுரை அச்சிடப்பட்டிருந்தது குறையில் ஒரு நிறையாகத் தெரிந்தது.

ஒரு பார்வையாளர் என்ற முறையில் ஈழத்து நினைவுகளைச் சுமந்து வந்த மேற்படி நிகழ்ச்சியானது மிக வெற்றியான நிகழ்ச்சியாகக் காணப்பட்டது. நிகழ்ச்சி தொகுத்து வழங்கப்பட்ட முறை நிகழ்ச்சி நிரலுக்கு சற்று வேறுபட்டு இருந்த போதிலும் ரசிகர்களைப் பல விதத்திலும் கவர்ந்தது. அதுமட்டுமல்லாது குறித்த நேரத்தில் ஆரம்பமாகி குறித்த நேரத்தில் முடிவடைந்த ஒரு எடுத்துக் காட்டான நிகழ்ச்சியாக இதனை வகைப்படுத்தலாம். அத்துடன் இதன் சிறப்பம்சமாக ஒவ்வொருவரின் வேறுபட்ட ரசனைக்கேற்ப சிறுவர் முதல் முதியோர் வரை நிறைவளிக்கக் கூடியதாக இருந்தது.

சென்ரனியல் தமிழ் மாணவ மன்றத்தின் இம்முயற்சியை மனமாரப் பராட்டும் இவ்விட்த்து அவர்கள் மென்மேலும் தமிழ் வளர்க்க வேண்டி நிறைகின்றேன்.



SUNIX INC.

The Computer Place
Serving you since 1978

3850 Steeles Ave., West, #5, Woodbridge, Ont. Tel. (905) 856-2222 Fax. (905) 856-3136

Unique PC Skills Training Program to ensure ...

EMPLOYABILITY



For E.I. & Welfare Recipients !

The Fact : Many unemployed are unable to get a job due to lack of skills and experience !

The Solution : We are offering a unique

"PC Skills + Experience Training Program"

Specially designed for E.I. & Welfare Recipients.

How It Works :

Knowledge + Experience → Program Completion → Results

- PC Skills In class Lectures (5 days) → In-shop Hands-on Practice (30 days) → Job search → Employment
- PC Skills In class Lectures (5 days) → In-shop Hands-on Practice (30 days) → Sunix Co-op Program → Profit Sharing or Self-employed

The Duration : 35 days (approx. 280 hours)

The Fees : $1600. (G.S.T. & Materials included)

Funding may be available for qualified E.I./Welfare Recipients.

Take Actions Today : Come to us for more information & contact your Councellor for finance and enrollment approval.

Prepare yourself for the high-demand & high-pay job, take the

MCP / MCSE Certification courses

SUNIX in conjunction with IMI, the MICROSOFT AUTHORIZED TECHNICAL EDUCATION CENTRE is proud to offer the folllowing widely recognized MICROSOFT CERTIFICATION COURSES :

(A) MICROSOFT CERTIFIED PROFESSIONAL (MCP) / ADMINISTERING NT 4.0

(B) MICROSOFT CERTIFIED SYSTEM ENGINEER (MCSE)

	(A)	(B)
COURSE FEE :	$3,300. + G.S.T. (Materials & lunch included)	$8,215. + G.S.T.
EXAM FEE : @ $ 150.	(Total 3 exams.)	(Total 6 exams.)
DAILY HOURS :	9A.M. – 5 P.M. with 1 hour for lunch	
TOTAL TIME PERIOD :	10 – 12 weeks	8 - 12 months
	(Including self-study, classroom lecture, practice sessions, labs, further studies, practice tests)	
STARTING DATES :	August 5, 1998 Call	August 5, 1998. Call

CLASSROOM LOCATION : *IMI, Microsoft Authorized Technical Centre at Weston, Ont.*

REGISTRATION : at SUNIX INC., 3850 Steeles Ave., W.,#5, Woodbridge, Ont.

Unique Small Computer Business Opportunities .

Introducing : The **Micro Mall**

A new concept in computer retailing business in Toronto, specially offered to small individual computer entrepreneurs with a desire and enthusiasm to own and operate one or more of the following specialty businesses with minimum operating cost and risk, but with maximum exposure.

We are planning to turn our existing 10 year old computer location into a multi-vendor computer marketplace, designed in such way that each individual vendor can immediately carry on with the already built-up business, and that their competitive edge can be strengthened due to the shared low overhead costs, reduced group advertising rate, more varieties of product categories and the friendly-personal-expert services.

Low overhead
High exposure
Landmark of low cost Computer products & Services

MICRO MALL
Computer Specialties Centre
(ONE PLACE DOES IT ALL)

The key to draw crowds In :
Varieties of low-priced computer products & friendly-personal- expert service all under one roof

	RENTAL INFORMATION	
1. PC SYSTEM/ PERIPHERALS	Rental Space: (approx.) 24 to 119 Sq. ft.	8. SMALL BUSINESS SERVICES (BOOK-KEEPING, WEB PAGE DESIGN & DEVELOPMENT, CD-BACKUP, SIGN CUTTNG)
2. PC REPAIR & UPGRADE		
3. SOFTWARE & PROGRAM'G		9. USED EQUIPMENT & PARTS
4. OFFICE MACHINE REPAIR	Monthly rent : $100-$400.	
5. ACCESSORIES	Existing furniture	10. LAN
6. MOBILITY PARTS & ACCESSORIES	provided w/o charge)	11. HOBBY ELECTRONICS
7. PC TRAINING		12. OTHERS

Get start your own business immediately, and be your own boss !
For more information, please come in or call us at : (905) 856-2222

Computer Resellers Buying Group

(Administered by Sunix Inc.)

We bring small resellers together to form a MASSIVE BUYING POWER !

* *

Independant Computer Dealers, Consultants, Home-Office Buyers, Vars :

If you are cuurently buying or building PC systems and parts for your customers, YOU are invited to join our Group, and grow with us . . .
(Sorry, this program is not for end users)

In UNITY, there is STRENGTH !

Why join the Group ?

- Strengthen your buying power, and improve your bottom line.
- Maximize your profit margin.
- Lower your product costs.
- Readily access the tremendous pool of expertise within the group.
- Leave your product sourcing problem to us, and concentrate on selling.
- Combat the increasing pressure of price cuts by the mass merchandisers and superstores.
- Enjoy more benefits as the group grows, e.g. : reduced rates for group advertising, credit card charges, freight, leasing, insurance, cheque guarranty services etc.

No membership fee, No commitment to make !
You have nothing to lose, but a lot to gain !

For more information and application form, simply send or fax your business card/letterhead to : "CRBG INFO."
3850 STEELES AVE., W. #5, WOODBRIDGE, ONT. L4L 4Y6
TEL. (905) 856-2222 FAX. (905) 856-3136

மோகநிலா



அத்தியாயம் இரண்டு

பிள்ளைப் பிராயத்திலே

பானுவிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? இன்டர் நெட்டில் மூழ்கிக் கிடந்த பானுவை ஒருமுறை நோக்கினாள். சுகுணாவின் தயக்கத்தைக் கவனித்த பானு கேட்டாள் "என்ன மம்மி. என்ன விசயம்?"

"என்னம்மா ஓரே பிஷியாகவிருக்கின்றாயே?" சுகுணா கேட்கவேண்டுமேயென்பதற்காகக் கேட்டு வைத்தாள். பானுவிற்கு விளங்கியது. இலேசாக முறுவலொன்று இதழ்க் கோடியில் ஓடி மறைந்தது.

"மம்மி என்ன விசயம்? நீ எதையோ மறைக்கின்றாய்? சொல்லு மம்மி"

இந்தக் காலத்துப் பிள்ளைகளை ஏமாற்றவே முடியாதென்று பட்டது.

"பானு உன்னுடன் கொஞ்சம் கதைக்க வேண்டும். உன்னுடைய வேலை முடிந்ததும் சொல்லம்மா"

"இப்பவே நீ சொல்லலாம் மம்மி" பானு கம்பூட்டரிலிருந்து எழும்பினாள். பானுவை மெல்லத் தோளோடு அணைத்த சுகுணா அவளை உச்சிமோர்ந்தாள். கொஞ்சினாள்.

"குஞ்சு அம்மா என்ன செய்தாலும் குஞ்சுவின்ற நல்லதிற்குத்தானே செய்வா.."

"மம்மிக்கு அதிலென்ன இப்ப சந்தேகம்?"

"ஊரிலை நடக்கிறதைப் பார்த்தால் எனக்குப் பயமாயிருக்கு. நீதானம்மா என்ர உயிர். செல்லம் உனக்கேதாவதென்றால் என்னால் தாங்க முடியாதம்மா"

"மம்மி எனக்கொன்றும் நடக்காது. நீ கவலைப் படாதையம்மா"

சுகுணா மகளை அப்படியே அணைத்தபடியே வந்து சோபாவில் அமர்ந்தாள்.

"பானு உனக்கும் வயது வந்திட்டுது. நீ சின்னப் பிள்ளையில்லை. நீயும் சில விசயங்களிலை கவனமாயிருக்க வேண்டும்."

"என்ன மம்மி நீதானே சொல்லிப்போட்டாய் நான் சின்னப் பிள்ளையில்லை என்று. பிறகென்ன உனக்குக் கவலை"

இதற்கென்ன கூறுவதென்று சுகுணாவிற்குப் பட்டது.

"இல்லை செல்லம். நீ என்னிடம் எதையுமே ஒளிக்கக் கூடாது. அம்மாவை உன்னுடைய நல்ல சிநேகிதியாக நினைத்துக் கொள்ளம்மா. அதைத்தான் சொல்ல வேண்டுமென்று நினைத்தனான். இந்த நாட்டு பண்பாடு கலாச்சாரம் எல்லாமே எங்களுடைய நாட்டிற்கு முற்றாக எதிரானது..."

இச்சமயம் பானு இடைமறித்தாள்.

"மம்மி நீ வீணாகப் பயப்பிடுறாய். எல்லாவற்றிலும் நல்லதுமிருக்கு கெட்டதுமிருக்கு. நாம் தான் சரியானதை எடுக்க வேண்டும். நீ வீணாக ஒன்றிற்கும் பயப்படாதே. நான் உன்னுடைய பெண்ணில்லையா?"

சுகுணாவிற்குப் பானுவை நினைக்கப் பெருமிதமாயிருந்தது. இவளை நினைத்தா பயப்பிட்டேனென்றிருந்தது. இந்த வயதில் குழந்தை எவ்வளவு தெளிவாகப் பேசுகிறாள் என்று பட்டது. குழந்தையை மீண்டுமொருமுறை இறுக அணைத்தவள் "உன்னை நினைக்க எனக்குப் பெருமையாயிருக்குதம்மா" என்றாள்.

"உன்னையும் நினைக்கத்தான்" என்ற பானு சுகுணாவின் கன்னத்தில் கொஞ்சிவிட்டு மானைப் போல் துள்ளி ஓடினாள். அச்சமயத்தில் அவள் உள்ளத்தில் இலேசாக ஒரு எண்ணம் ஓடி மறைந்தது 'இந்த அம்மாவை ஏமாற்றவே முடியாது' அந்த எண்ணம் தோன்றிய மறு கணமே முறுவலொன்றும் முகிழ்ந்து மறைந்தது.

சுகுணா இரவுச் சாப்பாடு செய்வதில் ஈடுபடத் தொடங்கினாள். மகள் பற்றிய நினைவும் பயமும் அவள் நெஞ்சிலும் பழைய நினைவுகளை உணர்வுகளைத் தூண்டி விட்டன. அப்பொழுது அவளுக்கு பதினாறு வயது நடந்து கொண்டிருந்தது. வாழ்க்கை எவ்விதம் ஒரு புத்துணர்வுடன் ஜொலித்துக் கொண்டிருந்தது. புதிய புதிய உணர்வுகளை உடல் பெற்று அனுபவித்துக் கொண்டிருந்தது. அதுவரை ஏற்படாத உணர்வுகளெல்லாம் திரைப்படப் பாடல் வரிகளைக் கேட்கும் போது தோன்ற ஆரம்பித்தன. இயற்கையின் ஒவ்வொரு செயலும் காட்சியும் பெரும் உள்ளக் கிளர்வை ஏற்படுத்தின. அந்த சூரியனின் தழுவலால் சிவந்து கிடக்கும் அடிவானப் பெண்ணைப் பார்த்து எத்தனை நாட்கள் அவள் பொறாமைப் பட்டிருக்கிறாள்...

"என்னம்மா சுகுணா அப்படியென்ன முழித்துக் கொண்டே கனவு" அம்மா அடிக்கடி திட்டுவாள், பரிகசிப்பாள். இப்பொழுது கூடச் சிரிப்பு வருகின்றது. "மாலைப் பொழுதின் மயக்கத்திலே கனவு கண்டேன் தோழி" பாடல் அவள் நெஞ்சில் எப்பொழுதுமே ஒரு வித விரக உணர்வைத் தோற்றுவித்தது. தலைவன் உணர்வால் பீடிக்கப் பட்டு அவனைக் காண ஏங்கும் ஒரு பெண்ணைப் போல் ஏங்கும் உணர்வு அடிக்கடி அலை மோதும். அந்தக் கற்பனைத் தலைவன் கண்ணெதிரே வந்து கவர்ந்து போக மாட்டானாவென்றிருக்கும். இத்தனை வருடங்கள் கடந்தும் கூட அந்தப் பாடலைக் கேட்கும்போது அத்தகையதொரு உணர்வுதானே ஏற்படுகின்றது. சுகுணாவிற்கு வியப்பாகவிருந்தது. புரியாமலுமிருந்தது. இன்னும் அவள் அந்தக் கற்பனைக் காதலனைத் தேடிக் கொண்டிருக்கின்றாளோ? சில உணர்வுகளிற்குச் சரியான விளக்கங்கள் புரிதல்கள் தெரிவதில்லையென்று பட்டது.

திடீரென அவளிற்குக் கேசவனின் ஞாபகம் தோன்றியது. கேசவன் அவளுடன் டியூசன் வகுப்பொன்றிற்கு வந்து கொண்டிருந்தான். சரியான சங்கோசப் பிராணி. அடிக்கடி ஓரக் கண்களால் அடிக்கடி இவளையே பார்த்துக் கொண்டிருப்பான். இவளிற்குச் சிரிப்பாகவிருக்கும். அவனைப் பைத்தியமாகவடிக்கும் தன் அழகை நினைக்கப் பெருமையாகவிருக்கும். ஒரு நாள் அந்தச் சங்கோசப் பிராணி மெல்ல மெல்ல யாருமில்லாத சமயம் பார்த்து இவளிடம் வந்து கடிதமொன்றை நீட்டி விட்டு ஓடிவிட்டான். முதல் காதல் கடிதம். இப்பொழுது கூட அந்த வரிகள் அப்படியே வரிக்கு வரி ஞாபகத்தில் இருக்கின்றன. கவிதையாக உணர்வுகளை அதில் அவன் கொட்டியிருந்தான்.

"அன்பே, ஆடி அசைந்து நீ நடந்தால் என் நெஞ்சோ
ஆடிப் போய் விடுகின்றதே. என் செய்வேன்.
பொட்டிட்டுக் கூந்தலைப் பின்னி மார்பிலிட்டு
தேராக நீ செய்வாய், என் நெஞ்சை நாராகக்
கிழித்து விட்டே. என்
நெஞ்சில் நிறைந்தவளே, என் நெஞ்சைத் தந்து
விட்டேன். உன்
நெஞ்சில் இடமிருந்தால் நேரிழையே சொல்லிவிடு.
இல்லையெனில்
வஞ்சியென்னை மன்னிப்பாய்
வடித்துவிட்ட மடலிற்காய்.
உன் நெஞ்சின் பதில் எதுவோ? சுகுணா
உன் வாழ்வே என் வேதம்."

இப்படி எழுதியிருந்தான். இவ்விதம் எழுத அந்த சங்கோசப் பிராணியால் எவ்விதம் முடிந்தது? முதல் முறை படித்தபொழுது நெஞ்சு புல்லரித்தது. மறுகணமே அவளது அகம்பாவம் முந்திக் கொண்டது. ஏதொ அவன் செய்யக் கூடாதவொன்றைச் செய்தது போலொரு உணர்வெழ விசயத்தைப் பெரிதாக்கி... அவன் அவமானத்தால் குன்றியே போனான். மனதிற்குள் போட்டு வைக்க வேண்டிய அந்தரங்கத்தை இப்படிச் சந்தி சிரிக்க வைத்து விட்டாளே...

"சுகுணா. நீங்களிப்படிச் செய்திருக்கத் தேவையில்லை"

இவ்விதம் கூறிப் பிரிந்தவனை அதன் பின் இதுவரை அவள் காணவேயில்லை. அவன் என்ன செய்துகொண்டிருப்பானோ? இத்தனை வருடங்களிற்குப் பின்னால் முதன்முறையாக அவன் மேல் ஒருவித அநுதாப உணர்வெழுந்தது.

அவன் செய்ததிலென்ன தவறு? அவன் அவள் மேல் ஆசைப் பட்டான். தன் உணர்வுகளை அவளிற்கு வெளிப்படுத்தினான். அதிலென்ன தவறு? அதனையேன் அவள் பெரிது படுத்தினாள்? அதைக் கேட்ட அவள் அப்பா எவ்விதம் தாண்டவமாடினார். எல்லோரிற்கும் முன் அவன் எவ்விதம் அவமானப்பட்டுப் போனான்? 'அதற்குரிய தண்டனையைத் தான் இப்பொழுது அனுபவிக்கின்றேனோ?

கேசவன் உண்மையிலேயே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். சுகுணாவிற்குத் தன் உணர்வுகள் பெரிதும் வியப்பையும், குழப்பத்தையும் தந்தன. இத்தனை வருடங்கள் கழித்துக் கேசவனின் நினைவுகள் வந்து இவ்விதம் தாக்குமென அவள் கனவிற் கூட எண்ணியிருக்கவில்லை.

(தொடரும்......)

வெ.ந.கிரிதரன்

இரவி விளம்பரங்கள்

வீடு வாங்க விற்க

வீடொன்றில் அறை வாடகைக்குண்டு.
விபரங்களிற்கு
(416)286-8071

Home Life Realty Inc.
வீடுகள் வாங்க அல்லது விற்கப் போகின்றீர்களா?
கவலையை விடுங்கள்.
எங்கள் சமுதாயத்து முதல் Real Estate விற்பனைப் பெண்மணியிடம் உங்கள் கவலையை ஒப்படையுங்கள்.
Shanthi Chandran
(416) 286-8071

For All Your Mortgage needs
Vijay Chandran
(416) 724-1549

கணனி சேவைகள்

ELECTRONIC PARTS WHOLESALE & RETAIL
Large quantities in stock at bargain prices. Fuses, Toggle switches, Panel Mount Fuse Holders. For a complete price list, please fax to: (905) 856-3136
e-mail: sinix@idirect.co
Tel: (905) 856-2222

SATURDAY PC SALE
Used PC Systems & peripherals at bargain prices.
IBM Aptiva 530(486 DX2-66) W/12MB RAM, 80 MB Hard drive, and serial mouse only $399.
HP Vectra VL12(486DX2-66) w/12MB Ram, 330MB hard drivr, serial mouse, 4xCD Rom, 16 bit sound card only $499.
Pentium 133 MHz system w/16 MB Ram, 2GB hard drive, serial mouse, 2M Video card, 6xCD Rom only $699
many other new and used items at low, low prices (cash & carry only, all sales are final).
Open from 10.30 to 4.30 3850 Steeles Ave W., #5 at Weston Rd
MORE INFO CALL
(416) 924-6456

ONSITE COMPUTER SERVICE
Computer support, Upgrades, Tutoring, Configs, Internet setup, Win 95 training
LOW RATES
(416)924-6456

PC SERVICE
Upgrades, Hardware/Software installations
(416) 425-2437

ONSITE WINDOWS 95/ INTERNET TRAINING
(416) 924-6456

REFILL YOUR INK JET CARTRIDGE
SAVE 50 -80%
(416) 285-6923

COMPUTER HELP
Internet Tamil font setup,
*Hardware/Software installation.
(416) 924-6456

486 COMPUTERS FOR SALE
COMPLETE SYSTEM
ONLY $450
(416)285-6923

TUTORING SERVICES

TUTORING SERVICES
science & maths
grade 9 to grade13
Anapayan BSc
(416)438-4245

ANALOG/DIGITAL ELECTRONICS TUTORING
(416)425-2437

SOLDERING TRAINING
(416)285-6923

WEBCOM COMMUNICATIONS
***WEB PAGE DESIGN**
*WEEKEND CLASSES
*WEB DESIGN
*PC TRAINING
*PC ASSEMBLY
*SOLDERING TRAINING
*INTERNET TRAINING
*BASIC ELECTRONIS(digital/analog)
*HTML ,JAVASCRIPT, C...MANY MORE
CALL FOR
(416) 924-6456
476 Parliament street, suite 201, Toronto, Ont. M4X 1P2

IMPORT/EXPORT TRAINING
சொந்தமாகத் தொழில் செய்ய இது உதவும்
(416) 923-2410

இரவியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்.

வரி விளம்பரங்கள்
மாதத்திற்கு $20 மட்டுமே..
(416) 924 — 6456

ஏனைய சேவைகள்

ALL YOUR INSURANCE NEEDS
(416) 928-1527

FOR YOUR ALL BATTERY NEEDS
ANTONY
(416) 285-6923

TV, VCR மற்றும் **Home Appliance** திருத்த வேலைகளிற்கு
Antony
(416) 285-6923

Jaffna Driving
*The first driving school in our community (20 years).
*The first lady driving instructer.
நகரில் நல்லதொரு ஸ்தாபனம்.
பல வருட அனுபவம் பெற்றவரால் பழக்கப் படுகின்றது.
CHANDRAN
(416)286-8071

WEB PAGE DESIGN
Low rates
(416) 924-6456

BELL MOBILITY
***Analog rates from 10 cents per minute**
*** PCS PLUS rates from 10 cents per minute (AIR MILES included; first incoming minute free)**
FREE MOBILE TO MOBILE CALLING
FOR RATES
ANTONY (416) 285-6923

BUSINESS

DIRECT SALES REPS WANTED
To sell Video Surveillance products to homes and small retail businesses and make over $100/sale. Many home and business people are looking for means and ways to combat and terminate the ever-growing burglary and unlawful break-in problems. Now is the time for you to make unlimited easy money. It is easy to sell and no technical experience required. Call Randolph at SUNIX Inc. For more details
(905) 856-2222

இரவியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்.

நீங்கள் சமூக உதவிப் பணத்தில் தங்கியுள்ளீர்களா?
அல்லது **unemployment insurance** இல் தங்கியுள்ளீர்களா?
உங்களை நாங்கள் **PC TECHNICIAN** ஆக்குவோம்.
Course கட்டணம் ஒழுங்கு செய்து தரப்படும்.
Randolph
(905) 856-2222

ASSOCIATER COORDINATOR WANTED
To join our computer resellers buying group, and earn unlimited in development & implementation of our CRBG Program. Internet and communication skill essential. To apply , please fax your resume to (905) 856-3136, or e-mail to sunix@idirect.com

விளம்பரங்களிற்கு
(416) 924-6456

நூலக சேவை

WEBCOM COMMUNICATIONS
நூலக சேவை
எமது ஸ்தாபனத்தில் அங்கத்தவராகச் சேர்வதன் மூலம் பின்வரும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
* எமது நூலகத்திலிருந்து Computer Booksஐ (HTML, C++, C, JAVASCRIPT, PERL, PC UPGRADING, WEB DESIGN..and many more..) கம்யூட்டர் நூல்களை இரவல் பெற்றுக் கொள்ளலாம்.
* RESUME HELP
* FREE FAX
* Library hours: sat & sun 10a.m -6p.m
(416) 924-6456
476 Parliament street, suite 201, Toronto, Ont. M4X 1P2

INTERNET TRAINING
Low rates
(416) 924-6456

COMPUTER TRAINING
Low rates
(416) 924-6456

SOLDERING TRAINING
Low rates
(416) 924-6456

WEB PAGE DESIGN
Low rates
(416) 924-6456

RESUME SERVICES
(416) 924-6456

COMPUTER ASSEMBLY
(416)924-6456

GOLDEN GRIDDLE®

FAMILY RESTAURANTS

New

முதற்தடவையாக பல்லின மக்களுக்காக

"GOLDEN GRIDDLE"

பெருமையுடன் வழங்கும்

$7.99 மட்டும்

All You can Eat Spicy Dinner Buffet





வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில்
மட்டும் பிப. 6:00மணி தொடக்கம் இரவு 11:00 மணி வரை

25க்கு மேற்பட்ட உணவு வகைகளுடன்

KIDS
3 -10
HALF PRICE

பிரைட் றைஸ்
பிளேன் றைஸ்
சிங்கப்பூர் பிரைட் நூடில்ஸ்
கொத்து ரொட்டி
செள மெயின்
Naan
Chilli சிக்கன்
கோழிக்கறி
மாட்டிறைச்சிக் கறி
இறாலுடன் மரக்கறி அல்லது
கணவாய் கறி
தண்டூரி சிக்கன்
Chicken Wings
Soups
கத்தரிக்காய்க்கறி
பருப்புக் கறி
French Fries
Salad
Cake.
கேசரி
பழங்கள்

Introducing
NEW
BUFFET TAKE OUT
$6.99
Per Container





FREE Gifts & Balloons For Kids

இன்னும் பல நாவுக்குச்
சுவையூட்டும்
தரம் நிறைந்த
உணவுகளை
உருசித்திட வாரீர்!

WE ACCEPT MAJOR CREDIT CARD

MasterCard VISA AMX

3090 Eglinton Ave. East (at Bellamy)
Scarborough, Ont. L.L.B.O

Tel: (416) 265-8429

MARKHAM RD.
AMPLE FREE PARKING
BELLAMY RD>
EGLINTON AVE.E
N

Home Style Cookin' At A Tasty Price®